## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.
Prosecution witness for P.W.18.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கருப்பசாமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026.

A1, 8, 10, 19 died. A7, 10, 13, 15 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பசுவந்தனை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2017ம் ஆண்டு புதியம்புத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 26.01.2017 அன்று நீராவி மேட்டுத்தெருவில் நானும், என் உதவியாளர் மாரியப்பன் என்பவரும் சென்று கொண்டிருந்தபோது போலீசார் 5 பேரை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். 12ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.21**. அதன் அடிப்படையில் புதியம்புத்தூர் மணிகட்டி மாடசாமி கோவிலுக்கு வடபுறமாக எங்களை அழைத்துச் சென்று ஒரு முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த சிவப்பு நிற பல்சர் இருசக்கர வாகனம் மற்றும் ரத்தக்கறை படிந்த அரிவாள் ஆகியவற்றை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 22**. மேற்படி இருசக்கர வாகனம் மற்றும் இதர வாகனங்கள் அடங்கிய புகைப்படம் **அ.சா.ஆ 23**. அந்த அரிவாள் **சா.பொ.4**. 15 ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.24**. அதன் அடிப்படையில் புதியம்புத்தூர் மணிகட்டி மாடசாமி கோவிலுக்கு வடபுறமாக எங்களை அழைத்துச் சென்று ஒரு முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கறை படிந்த அரிவாள் ஒன்றை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 25**. மேற்படி அரிவாள் **சா.பொ.5.** 13ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.26**. அதன் அடிப்படையில் புதியம்புத்தூர் மணிகட்டி மாடசாமி கோவிலுக்கு வடபுறமாக எங்களை அழைத்துச் சென்று ஒரு முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கறை படிந்த வாள் ஒன்றை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 27**. மேற்படி வாள் **சா.பொ.6.** 9ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.28**. அதன் அடிப்படையில் புதியம்புத்தூர் மணிகட்டி மாடசாமி கோவிலுக்கு வடபுறமாக எங்களை அழைத்துச் சென்று ஒரு முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கறை படிந்த அரிவாள் ஒன்றை ஆஜர் செய்ததை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 29**. அந்த அரிவாள் **சா.பொ.7.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி கோவில் தூத்துக்குடி – புதியம்புத்தூர் சாலையில் சாலைக்கு வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலை சுற்றி குடியிருப்புகள் உள்ளன. மேற்படி கைப்பற்றுதல் மகஜர்களில் மேற்படி ஆயுதங்களின் வகைகள், அளவுகள் ஆகியவை சொல்லப்படவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் மேற்படி எதிரிகளை போலீசார் கைது செய்யவில்லை என்றும், மேற்படி எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், நான் அரசு ஊழியர் என்பதால் நிலையத்திலேயே போலீசார் தயாரித்துக் கொண்ட ஆவணங்களில் நான் நிலையத்தில் கையொப்பமிட்டுவிட்டு தற்போது பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.12 18:55:53 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.
Prosecution witness for P.W.19.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.சக்கரவர்த்தி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026.

A1, 8, 10, 19 died. A7, 10, 13, 15 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுார்பாண்டியாபுரத்தில் குடியிருந்து தச்சராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு என் அண்ணன் முனியசாமி இறந்தது சம்பந்தமாக நான் துாத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது போலீசார் என்னிடம் சில வெற்றுத் தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 30 மற்றும் 31**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 27.01.2017 அன்று இரவு 7 மணியளவில் அரசடி விலக்கு சந்திப்பில் போலீசார் 2, 4, 5, 6 எதிரிகளை கைது செய்து விசாரித்து 6ம்

எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போதும் அதன் அடிப்படையில் 6ம் எதிரி புதுார்பாண்டியாபுரம் மேம்பாலத்திற்கு கீழே எங்களை அழைத்துச் சென்று அங்கு மறைத்து வைத்திருந்த ரத்தக்கறை படிந்த அரிவாளை ஆஜர் செய்தபோது போலீசார் அதை மகஜரில் கைப்பற்றும்போதும் நானும், குமாரசாமி என்பவரும் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.12 18:56:02 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.

Prosecution witness for P.W.20.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.குமாரசாமி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026.

A1, 8, 10, 19 died. A7, 10, 13, 15 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுார்பாண்டியாபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு என் உறவினர் முனியசாமி இறந்தது சம்பந்தமாக நான் துாத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது போலீசார் என்னிடம் சில வெற்றுத் தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 32 மற்றும் 33**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 27.01.2017 அன்று இரவு 7 மணியளவில் அரசடி விலக்கு சந்திப்பில் போலீசார் 2, 4, 5, 6 எதிரிகளை கைது செய்து விசாரித்து 6ம்

எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போதும் அதன் அடிப்படையில் 6 ம் எதிரி புதூர்பாண்டியாபுரம் மேம்பாலத்திற்கு கீழே எங்களை அழைத்துச் சென்று அங்கு மறைத்து வைத்திருந்த ரத்தக்கறை படிந்த அரிவாளை ஆஜர் செய்தபோது போலீசார் அதை மகஜரில் கைப்பற்றும்போதும் நானும், அ.சா.19 ம் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.12 18:56:09 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.